**மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!**

**வணக்கம்.**

2021 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உரையாற்றுவதை நான் பெரும் பேறாக கருதுகிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது, 15வது சட்டமன்றத்தின் நிறைவு கூட்டத் தொடராகும். பல அமர்வுகளில் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களின் வாயிலாக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பினை நல்கிய இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் திறன்மிகு தலைமையின் கீழ், இந்த அரசு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டை, நாட்டிலேயே தலை சிறந்த

மாநிலம் ஆக்கும் இலக்கினை அடைவதில் இந்த அரசு வெற்றிநடை போடுகிறது.

**2)** இன்று நாம், மிகவும் அசாதாரணமான, முன்நிகழ்வுகள் அற்ற சூழலில் சந்திக்கின்றோம். நம் வாழ்நாளில், முன் எப்போதும் காணாத அளவில், மிகப் பரவலான ஒரு பெருந்தொற்று நோயால் உலகம் பாதிக்கப்பட்டுள்ளது. கோவிட்–19 பெருந்தொற்று நோயை எதிர்கொள்வதற்கு அனைத்து அரசு இயந்திரங்களையும் திறம்பட ஒருங்கிணைத்த பெருமையும், புகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். உரிய நேரத்தில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டன. பெருந்தொற்று நோயின் பரவலை தடுப்பதற்கு, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட காலத்திலும், போதிய அளவில் அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பு உறுதி செய்யப்பட்டது. பின்னர், தேவைக்கு ஏற்ப, படிப்படியாக தளர்வுகள் அனுமதிக்கப்பட்டன.

காய்ச்சல் முகாம்கள் மூலம் நோய் கண்காணிப்பு, தொடர் பரிசோதனை மற்றும் நோய்த்தொற்றின் தடம் அறிதல் நடவடிக்கைகள் திறம்பட மேற்கொள்ளப்பட்டன. சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்தி, மனித வளங்களை அதிகரித்து, பயனுள்ள சிகிச்சை நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. ஆர்.டி–பி.சி.ஆர் பரிசோதனை கருவிகள், மருத்துவ உபகரணங்கள், முழு உடல் பாதுகாப்புக் கவச உடைகள் மற்றும் தரமான மருந்துகள் போதிய அளவில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டன.

**3)** ஆர்.டி–பி.சி.ஆர். பரிசோதனை முறையின் விலை, பிற பரிசோதனை முறைகளை விட அதிகமாக இருந்தாலும், அதன் உயர்தரத்தினைக் கருத்தில் கொண்டு, நாட்டிலேயே பிரத்தியேகமாக ஆர்.டி–பி.சி.ஆர் பரிசோதனை முறையைக் கையாண்ட ஒரே பெரிய மாநிலம் தமிழ்நாடாகும். நோயின் நிகழ்வை சரியாகக் கண்டறிவதையும், நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதையும் இது உறுதி செய்துள்ளது.

கோவிட்–19 பெருந்தொற்று நோயை எதிர்கொள்வதற்கு, பொது சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில், இந்த அரசு செய்த முதலீடுகள், பெரிய அளவில் பலனளித்துள்ளன. சுகாதார உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, மருத்துவமனைகளிலும், கோவிட் பராமரிப்பு மையங்களிலும் கூடுதலாக, **1,38,309** படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆக்சிஜன் வசதிகள் கொண்ட **34,849** படுக்கைகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன.

**4)** மேற்கூறிய நடவடிக்கைகள் வாயிலாக, இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் இடையே மட்டுமல்லாது, உலக அளவில் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதிலும், உயிர் இழப்பைக் குறைப்பதிலும் தமிழ்நாடு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. நோய்த் தொற்று மீண்டும் பரவுவதைத் தடுப்பதற்கான தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார். தமிழ்நாட்டில் கோவிட்–19 தொற்றுநோயை எதிர்த்துப்

போராடுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர், அனைத்து அமைச்சர்கள், அரசு இயந்திரம், குறிப்பாக சுகாதாரம், வருவாய், காவல், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய துறைகளின் முன்களப் பணியாளர்கள் இணைந்து ஓர் அணியாக அயராது உழைத்துள்ளதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

5) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் கோவிட் தடுப்பூசி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். மாநிலம் முழுவதும் கோவிட் தடுப்பூசி திறம்பட வழங்கப்பட்டு வருகிறது. முதற் கட்டமாக, கோவிட்–19 தொற்றுநோய்க்கு எதிரான போரில் ஈடுபட்டு வரும் சுகாதாரத் துறைப் பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுகின்றது. அடுத்த கட்டமாக, ஏனைய முன்களப் பணியாளர்களுக்கும் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்படும். அனைத்து மக்களுக்கும், அரசு உரிய நேரத்தில், படிப்படியாக தடுப்பூசியை வழங்கும். இதனால், இயல்பான சமூக

மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் முழுமையாகச் செயல்படத் தொடங்கும்.

**6)** புதிய பாதை வகுக்கும் இரண்டு புதுமையான சிறப்பு முயற்சிகளை, இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. மாநில அரசு பள்ளிகளில் **6** ஆம் வகுப்பு முதல் **12** ஆம் வகுப்பு வரை பயின்று 'நீட்' தேர்வில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு, சிறப்புச் சட்டத்தின் மூலம், மருத்துவப் படிப்பு, பல் மருத்துவப் படிப்பு, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி படிப்புகளுக்கான அரசு இடங்களில் **7.5** சதவீதம் ஒதுக்கீடு செய்ததன் மூலம், சமூக நீதி மற்றும் சம நீதியில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் **435** மாணவர்கள் இந்த ஆண்டில் பயனடைந்துள்ளது மனமகிழ்ச்சி அளிக்கிறது. இந்த மாணவர்களின் கல்வி மற்றும் விடுதிக்கான மொத்தச் செலவையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. இந்நடவடிக்கை, அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மற்றும் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களை,

மருத்துவக் கல்வி பயில்வதற்கு பெரிதும் ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் தொலைதூர கிராமப்புறங்களில் பணியாற்ற விரும்பும் மருத்துவ வல்லுநர்களையும் உருவாக்கும். தொலைதூர கிராமப்புறங்களிலும், நகர்ப்புற குடிசைப்பகுதிகளிலும் இலவச ஆரம்ப சுகாதார வசதிகளை அளிப்பதற்காக, 2,000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்குகள் உருவாக்கும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஏற்கெனவே, இந்தத் திட்டம் ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்ட முன்மாதிரி திட்டமாகப் பாராட்டப்படுகிறது. இவ்விரண்டு சிறப்பு முயற்சிகளைச் செயல்படுத்தியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

7) மக்களுக்கு நல்லாட்சியை வழங்க வேண்டுமென்ற இந்த அரசின் நிலையான நோக்கத்தை அனைவரும் நன்கு அறிவார்கள். கடந்த ஆண்டு, முதன்முறையாக இந்திய அரசு வெளியிட்டுள்ள நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில்,

தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றது. மேலும், ‘இந்தியா டுடே’ பத்திரிகை **2020** ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில், ‘மாநிலங்களின் நிலை’ என்ற தலைப்பில், மேற்கொண்ட ஆய்வில், ‘ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம்’ என்று தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த விருதுகள், மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின், நடைமுறைக்கேற்ற, செயல்திறன் மிக்க ஆளுமையினை எடுத்துக்காட்டுகிறது. நம் மாநிலம் தொடர்ந்து தேசிய அளவில் பெறும் விருதுகள் மற்றும் பாராட்டுகளுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவர் தலைமையின் கீழ் செயல்படும் அனைத்து அரசு அமைப்புகளையும் நான் வாழ்த்துகிறேன்.

**8)** ‘பரிவுள்ள ஆளுமை’ என்பது இந்த அரசின் முக்கியக் கோட்பாடாகும். ‘அம்மா திட்டம்’, ‘முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்’, ‘வட்ட இணையவழி மனுக்கள் கண்காணிப்பு அமைப்பு’ மற்றும் ‘அம்மா அழைப்பு மையம்’ உள்ளிட்ட பல்வேறு

குறை தீர்க்கும் வழிமுறைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. தற்போதுள்ள அனைத்து குறை தீர்க்கும் அமைப்புகளையும் முதலமைச்சரின் உதவி மையம் வாயிலாக ஒருங்கிணைத்து, 'முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம்' செயல்படுத்தப்படும். அனைத்துக் குறைகளையும் உரிய கால வரம்பிற்குட்பட்டு, தீர்வு காண்பதை உறுதிசெய்யும் வகையில், ஒரு வலுவான வழித்திட்ட அமைப்பும், குறைகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கான முகப்புப் பக்கமும் உருவாக்கப்படும். குடிமக்கள் தங்கள் வீட்டிலிருந்தே, முதலமைச்சரின் உதவி மையத்தின் **1100** என்ற எண்ணிற்கு அழைப்பதன் மூலம், அரசின் சேவைகளை விரைவில் பெற இயலும்.

**9)** சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதே இந்த அரசின் தலையாய நோக்கமாகும். நோயின் தடம் அறிதல், ஊரடங்கை நடைமுறைப்படுத்தியது, நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளை திறம்படக்

கண்காணித்தது என பெருந்தொற்றை எதிர்கொள்வதற்கு காவல்துறையின் பங்கு குறிப்பிடத்தக்கது. பல்வேறு கட்டுப்பாடுகளை அமல்படுத்துவதில் காவல்துறை முழுமையாக ஈடுபட்டிருந்தாலும், சட்டம் ஒழுங்கு தொடர்ந்து சிறப்பாக நிலைநாட்டப்பட்டது. போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் உளவுத்துறை அளித்த தகவல்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டன. நடப்பு ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முறையாக நடத்துவது உட்பட பல்வேறு சவால்களை எதிர்கொள்ள காவல் துறை முழுமையாக தயார் நிலையில் உள்ளது.

10) நம் தாய்த் தமிழ்மொழியின் பெருமையை வளர்ப்பது இந்த அரசின் முதன்மைக் குறிக்கோளாகும். தமிழ்மொழி பேசப்படும் பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடியவர்களின் முயற்சிகளை கௌரவிக்கும் வகையில், எல்லைக் காவலர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை

**4,500** ரூபாயிலிருந்து **5,500** ரூபாயாகவும், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை **2,500** ரூபாயிலிருந்து **3,000** ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை **3,500** ரூபாயிலிருந்து **4,500** ரூபாயாகவும், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை **2,000** ரூபாயிலிருந்து **2,500** ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. கீழடி அகழ்வாராய்ச்சியில், சங்ககாலப் பண்பாட்டின் செழுமையான தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. இந்த முக்கிய தொல்பொருட்கள் தற்போது தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டு வரும் உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்தில் காட்சிப்படுத்தப்படும். இதுவரை, சொற்குவை வலைதளத்தில் **3,85,788** சொற்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. மாநில ஆட்சிமொழி (சட்டம் இயற்றும்) ஆணையம், **38** மத்தியச் சட்டங்களை தமிழில் மொழியாக்கம் செய்ததுடன், இதுவரை,

**10,000–** க்கும் மேற்பட்ட சொற்களைத் தொகுத்து, தமிழில் ஒரு சட்ட அகராதியைத் தயாரித்து வருகின்றது.

**11)** மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் புகழிற்குப் பெருமை சேர்க்கும் வகையில், அவர்களின் நினைவு மண்டபம் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டுள்ளது. மறைந்த மாண்புமிகு முதலமைச்சரின் ‘வேதா நிலையத்தை’, அரசு கையகப்படுத்தி, ஒரு சிறப்புச் சட்டத்தின் மூலம், நினைவு இல்லமாக மாற்றி, அதுவும் திறக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில், மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் மகத்தான பங்களிப்பைப் போற்றும் வகையில், தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் வளாகத்திற்கு டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகம் என பெயர் சூட்டப்பட்டது. மேலும், அவ்வளாகத்தில் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் **9** அடி உயரம் கொண்ட வெண்கலத் திருவுருவச் சிலை நிறுவப்பட்டது. மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

12) கோவிட்–19 பெருந்தொற்று நோயாலும், அதன் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும், பொருளாதார வளர்ச்சியில் கணிசமான மந்தநிலையுடன் 2020–21 ஆம் நிதியாண்டு தொடங்கியது. வருவாய் வரவினங்கள் கடுமையாகக் குறைந்து, கூடுதல் செலவினங்கள் பெரிய அளவில் ஏற்பட்ட போதிலும், இந்தக் கடினமான காலகட்டத்தில் நிதி நிலைமையை அரசு நேர்த்தியாக நிருவகித்தது. கோவிட்–19 மீட்டெடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கான செலவினங்கள், சுகாதார உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் மூலதனச் செலவினங்கள் ஆகியவை முன்னுரிமை அடிப்படையில் அதிகரிக்கப்பட்டன. கோவிட்–19 நிவாரணம் மற்றும் மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்காக, இதுவரை 13,208 கோடி ரூபாய், தனது சொந்த நிதி

ஆதாரங்களிலிருந்து தமிழ்நாடு அரசு செலவிட்டுள்ளது. பிற மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழ்நாடு அரசு, அரசு ஊழியர்களுக்கு ஊதியத்தை தாமதப்படுத்தவோ, குறைக்கவோ இல்லை. உரிய நேரத்தில், செலவு குறைந்த கடன்களைப் பெற்றதன் மூலம், கோவிட்–19 பெருந்தொற்று நோயின் கடுமையான தாக்கத்திலிருந்து தமிழ்நாட்டு மக்களை இவ்வரசு பாதுகாத்துள்ளது.

**13)** சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தியதன் விளைவாக, மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை சில மாதங்களுக்கு வழங்கப்படாமல் இருந்தது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்தில், தமிழ்நாடு முக்கியப் பங்கு வகித்தது. மிகவும் கடுமையான நிதி நிலைமை உள்ள இந்த ஆண்டில் கூட, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக, இதுவரை 13,300 கோடி ரூபாயை இந்த அரசு பெற்றுள்ளது. இத்தொகையில், சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்தால் செயல்படுத்தப்படும் உத்தியின்படி, இழப்பீட்டுக்குப்

பதிலாக **4,890** கோடி ரூபாய் கடனும் அடங்கும். **2017–18** ஆம் ஆண்டில், மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்ட ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி ஒதுக்கீடு தொடர்பான பிழையை சரிசெய்து, இறுதியாக **4,321** கோடி ரூபாயை இந்த ஆண்டு தமிழ்நாடு பெற்றது மனநிறைவு அளிக்கின்றது.

**14)** கோவிட்–**19** பெருந்தொற்று நோயின் தாக்கத்திலிருந்து, பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளுக்கு உதவுவதற்காகவும், வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவும், மேலும் பல்வேறு நடவடிக்கைகளை பரிந்துரைக்க, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரும், பிரதம மந்திரியின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் முன்னாள் தலைவருமான டாக்டர் சி. இரங்கராஜன் தலைமையில் ஒரு உயர்மட்ட வல்லுநர் குழுவை அரசு நியமித்தது. உயர்மட்டக் குழுவின் பல்வேறு பரிந்துரைகளின் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகளின்

மூலம், பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு, பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கான வலுவான அறிகுறிகள் இப்பொழுதே காணப்படுகின்றன.

**15)** பெருந்தொற்று நோயை எதிர்கொள்வதற்காக, மருத்துவ உபகரணங்கள், பாதுகாப்புக் கவச உடைகள் மற்றும் மருந்துகள் தயாரிப்பு போன்ற முக்கியமான துறைகளில் முதலீட்டை ஊக்குவிப்பதற்காகவும், தொற்றுநோய்க்குப் பின்னர் இடம்பெயர விரும்பும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், இந்த அரசு பல்வேறு முயற்சிகளை முனைப்பாக மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக, தொற்றுநோய்க் காலத்தின் போதே, வரலாற்றுச் சாதனையாக, **73** புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வாயிலாக, **1,00,721** நபர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில், **60,674** கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. **2020** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில், CARE Ratings நிறுவனத்தின்

அறிக்கையின்படி, இந்திய அளவில் முதலீட்டுத் திட்டங்களில் அதிகப் பங்கைப் பெற்று (16 சதவீதம்), முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. கோவிட்–19 பெருந்தொற்று நோய்க் காலத்தின் முதல் இரண்டு காலாண்டுகளில், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது என்று 'பிராஜெக்ட்ஸ் டுடே' நிறுவனமும் குறிப்பிட்டுள்ளது. முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டின் மீது தொடர்ந்து வைத்திருக்கும் நம்பிக்கையை இது பிரதிபலிக்கிறது. மேலும், மாநிலத்தின் வலுவான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தை இது உருவாக்கும்.

16) 2020 ஆம் ஆண்டில், 'நிவர்' மற்றும் 'புரெவி' ஆகிய இரண்டு புயல்களால் தமிழ்நாடு தாக்கப்பட்டது. மேலும், ஜனவரி மாதத்தில் பருவம் மாறி பெய்த கனமழையால் அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்கள் பெருமளவில் சேதமடைந்தன. அரசினால் மேற்கொள்ளப்பட்ட முனைப்பான நடவடிக்கைகளால், உயிர் இழப்புகள் மற்றும் உடைமைகளுக்கு சேதம்

ஏற்படுவது வெகுவாகக் குறைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யும் வகையில், எந்த ஒரு இடையூறும் இல்லாமல் அத்தியாவசிய சேவைகள் வழங்கப்பட்டன. அரசின் இந்த நடவடிக்கைகள், ஊடகங்கள் மற்றும் பொது மக்களிடையே, பெரும் பாராட்டைப் பெற்றன. நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்ததில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிகு தலைமையை நான் பாராட்டுகிறேன். இரண்டு புயல்களால் 3,750 கோடி ரூபாய் மற்றும் 1,514 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்பட்ட சேதங்களை, விரிவாக விளக்கக் கூடிய இரண்டு கோரிக்கை மனுக்களை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு அளித்துள்ளது. மேலும், இந்த நிதியை விரைவாக வழங்குமாறு மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துகிறோம். மத்திய அரசின் நிதி விடுவிப்பிற்குக் காத்திருக்காமல், பயிர் சேதமடைந்த அனைத்து விவசாயிகளுக்கும், உச்சவரம்பின்றி நிவாரணத் தொகையை மாநில அரசு வழங்கியுள்ளது. நெல்லுக்கு இடுபொருள் மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு 20,000 ரூபாயும், மானாவாரிப்

பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 10,000 ரூபாயும், இந்த அரசு நிவாரணத் தொகையாக வழங்கியது. இரண்டு புயல்கள் மற்றும் ஜனவரி மாதத்தில் பருவம் மாறி பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட 16.78 இலட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு மொத்தம் 1,715 கோடி ரூபாய் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகின்றது. உரிய நேரத்தில் இந்த அரசு நிதி உதவியினை வழங்கியதால் விவசாயிகளின் துயர் துடைக்கப்பட்டுள்ளது.

17) ஊரடங்கிலிருந்து மீண்டு வருவதற்கு உதவியாக, மாநிலம் முழுவதும் அரிசி குடும்ப அட்டையைக் கொண்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என 2020 ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இதனையடுத்து, 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தீவிர ஊரடங்கை அறிவித்தபொழுது, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள் மற்றும் மதுரை மாநகரத்தில் உள்ள

**28,31,535** அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதல் நிதியுதவி ரொக்கமாக வழங்கப்பட்டது. அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் **23,13,957** உறுப்பினர்களுக்கு, **476** கோடி ரூபாய் நிதியுதவி ரொக்கமாக வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, பெருந்தொற்று நோய், இரண்டு புயல்கள் மற்றும் ஜனவரி மாதத்தில் பருவம் மாறிப் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு உதவும் விதமாக, அரிசி குடும்ப அட்டையுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும், **2,500** ரூபாய் நிதியுதவியுடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. மாநிலத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களும் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு உதவியதுடன், பொருளாதாரத்திற்கு மிகவும் தேவையான நுகர்வு ஊக்கத்தையும் இது அளித்துள்ளது. டாக்டர் சி. இரங்கராஜன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

**18)** மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் உரிமைகளை, இந்த அரசு தொடர்ந்து தீவிரமாகப் பாதுகாக்கும். காவேரி நதிநீர் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பையும் செயல்படுத்த வேண்டும் என்ற இந்த அரசு எடுத்த முழுமுயற்சியின் காரணமாக, மத்திய அரசு, 'காவேரி நதி நீர் மேலாண்மை ஆணையம்' மற்றும் 'காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழு' ஆகியவற்றை உள்ளடக்கி 'காவேரி நதி நீர் மேலாண்மைத் திட்டம் 2018 –ஐ' மத்திய அரசிதழில் 1–6–2018 அன்று வெளியிட்டது. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை மீறியும், தமிழ்நாடு அரசின் அனுமதியின்றியும், காவேரி மற்றும் அதன் கிளை நதிகளின் குறுக்கே யாதொரு நீர்த்தேக்கத்தையோ அல்லது திசை திருப்பும் அமைப்புகளையோ கர்நாடக அரசு கட்டுவதை அனுமதிக்கக்கூடாது என்று மத்திய அரசிடம் நாங்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம். மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி, கர்நாடக அரசால் முன்மொழியப்பட்ட மேகதாது திட்டத்தை நிராகரிக்க

வேண்டுமென்று மத்திய அரசை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

**19)** மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி, பெரியாறு ஆற்றின் குறுக்கே எந்தவொரு புதிய அணையையும் கட்டுவதற்கு, கேரள மாநிலத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துகிறோம். முல்லைப் பெரியாறு அணையினை வலுப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளத் தேவையான அனுமதிகளை விரைந்து வழங்குமாறு மத்திய அரசையும், கேரள அரசையும் இந்த அரசு கேட்டுக்கொள்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் மற்றும் ஏனைய நதிநீர்ப் பிரச்சினைகளில் இணக்கமான உடன்பாட்டை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகள், அலுவலர்கள் மட்டத்தில் முன்னேற்றத்தில் உள்ளது. தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவின்படி, பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

காண்பதற்காக, 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகள் சட்டத்திலுள்ள விதிமுறைகளின் கீழ், தீர்ப்பாயம் ஒன்றை அமைக்குமாறு மத்திய அரசிடம் நாங்கள் கோரியுள்ளோம்.

20) தமிழ்நாட்டின் அருகியுள்ள நீர்வளங்களைப் பாதுகாப்பதிலும், திறம்படப் பயன்படுத்துவதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உரிய கவனம் செலுத்துகின்றது. ஜல் சக்தி அமைச்சகத்தால், சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக, 2019 ஆம் ஆண்டிற்கான 'தேசிய நீர் விருது' தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நீர்வளப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட, பெரும் புகழ்வாய்ந்த குடிமராமத்து திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு, இந்த விருது ஒரு சிறப்பான அங்கீகாரமாகும். 2017–18 ஆம் ஆண்டு முதல், குடிமராமத்து திட்டத்தின் கீழ், 1,418 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 6,211 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நீர்ப்பாசன அமைப்புகளை

நவீனப்படுத்துவதற்கான இந்த அரசின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன், 2,639 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கல்லணைக் கால்வாய் பாசன அமைப்பை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கீழ் பவானி பாசன அமைப்பை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தை 933 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த, அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின் மூலம், 2.47 இலட்சம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெறும். காவேரி ஆற்றின் குறுக்கே, 406 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நஞ்சை–புகலூர் தடுப்பணைத் திட்டத்தின் அடிக்கல் நாட்டப்பட்டதன் மூலம், ‘நடந்தாய் வாழி காவேரி திட்டம்’ தொடங்கப்பட்டுள்ளது. காவேரி – குண்டாறு திட்டத்தின் முதல் கட்டமாக, காவேரி – தெற்கு வெள்ளாறு இணைப்பின் பணிகள் விரைவில் தொடங்கப்படும். நீண்ட காலமாக நிலுவையிலிருந்த அத்திக்கடவு–அவிநாசி நீரேற்றுப் பாசனத் திட்டத்திற்கு 1,652 கோடி ரூபாயை,

அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் முதற்கட்டப் பணிகள் நிறைவேற்றப்படும். இதே போன்று, மேட்டூர் அணையின் உபரி நீரைக் கொண்டு, 100 வறண்ட ஏரிகளை நிரப்புவதற்காக, சரபங்கா நீரேற்றுப் பாசனத் திட்டப் பணிகள் 565 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 2021 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் இப்பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

21) விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக, பல்வேறு செயல்திறன் மிக்க நடவடிக்கைகளை, இந்த அரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தின் வாயிலாக, காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள வேளாண் விளைநிலங்களும், விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச்

சிறப்பு மிக்க இந்தச் சட்டத்தின் மூலம், காவேரி டெல்டா பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியதால், அவருக்கு வழங்கப்பட்ட ‘காவேரி காப்பாளன்’ என்ற பட்டத்துக்குப் பொருத்தமானவர் ஆகிறார். 8 ஆண்டுகளுக்குப் பிறகு, குறுவை நெல் சாகுபடிக்காக, உரிய நாளான ஜூன் 12 ஆம் தேதியன்றே, மேட்டூர் அணை திறக்கப்பட்டது. பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் இழப்பிற்காக, 9,312 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களில் மறுசீரமைக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ள நிலையில் கூட, நமது மாநிலத்தில் உள்ள விவசாயிகள், பயிர்க் காப்பீட்டின் பாதுகாப்பைத் தொடர்ந்து பெறவேண்டும் என்பதற்காக, 2020–21 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த கூடுதல் நிதிச் சுமையை இந்த அரசு ஏற்று வருகிறது. இந்தியாவிலேயே,

நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக, **2019–20** ஆம் ஆண்டில், **1,112** கோடி ரூபாய் மானியத்துடன் **6.52** இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

**22) 2011** ஆம் ஆண்டு முதல் இந்த அரசின் முயற்சிகளால், ஊரகப் பொருளாதாரத்தின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில், கால்நடைத் துறையின் பங்கு பெருமளவில் அதிகரித்துள்ளது. **2011** ஆம் ஆண்டு முதல், மொத்தம் **1,06,277** கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு **1,06,277** கறவை மாடுகளும் **12,44,010** கிராமப்புற ஏழைக் குடும்பங்களுக்கு **49,76,040** ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. **2018** ஆம் ஆண்டு முதல், **3,60,620** ஏழைக் குடும்பங்களுக்கு **1,09,40,500** கோழிகள் வழங்கப்பட்டுள்ளன. பெருகியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, தீவனப் பயிர், தீவனம்,

உயர்தர கால்நடைப் பராமரிப்பு மற்றும் நிலையான சந்தைப்படுத்துதல் போன்றவை மேம்படுத்தப்பட்டு, அவை தொடர்ந்து கிடைக்க உறுதி செய்யப்பட்டுள்ளது. தலைவாசல், தேனி மற்றும் உடுமலைப்பேட்டையில் மேலும் மூன்று கால்நடை மருத்துவக் கல்லூரிகளை அரசு நிறுவியுள்ளது. இந்த அரசின் ஒரு முக்கிய சாதனையாக, சேலம் மாவட்டம் தலைவாசலில் 'கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்' நிறுவப்பட்டது. இதன் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இந்நிலையம் மிக விரைவில் செயல்படத் தொடங்கும்.

**23)** நமது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில், நமது மீனவர்களின் மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடற்பகுதியில் அமைதியாக மீன்பிடித்துக் கொண்டிருந்த பொழுது, இலங்கை கடற்படையினர் அவர்களுடைய கப்பலைக் கொண்டு வேண்டுமென்றே தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகில்

மோதியதன் விளைவாக, நான்கு தமிழக மீனவர்கள் தங்களின் இன்னுயிரை இழந்துள்ளனர். இச்செயலை இந்த அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. அதே வேளையில், இம்மீனவர்களின் குடும்பத்திற்கு தலா 10 இலட்சம் ரூபாய் நிவாரணமும், வாரிசுதாரர்களுக்கு அரசு சார்ந்த பணியிடமும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தை இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும்படி மத்திய அரசிடம் நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். இலங்கை நாட்டின் காவலில் இருக்கும் மீதமுள்ள 12 மீனவர்களையும் மீட்டெடுக்க, அரசு தொடர்ந்து தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

24) 200 கடல் மைல்கள் பரப்பளவில் உள்ள பிரத்தியேகமான பொருளாதார மண்டலத்தை தமிழ்நாடு மீனவர்கள் பயன்படுத்த ஏதுவாக, ஆழ்கடலில் மீன்பிடித்தலை ஊக்குவிப்பது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் தற்போது கட்டுமானத்தில் உள்ளன. மேலும், மீன்பிடி

துறைமுகங்கள், மீன் தரையிறங்கும் தளங்கள், குளிர் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகள் உள்ளிட்ட கரையோர உட்கட்டமைப்புகள் விரைவாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. தேங்காய்ப்பட்டணத்தில் 97 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மூக்கையூரில் 129 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், பூம்புகாரில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மீன்பிடித் துறைமுகங்களின் பணிகளும், குந்துக்கலில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் தரையிறங்கும் தளத்தின் பணிகளும் நிறைவடைந்துள்ளன. திருவொற்றியூர் குப்பத்தில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தரங்கம்பாடியில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வெள்ளப்பள்ளத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், முதுநகரில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மீன்பிடித் துறைமுகங்களின் கட்டுமானப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அழகன் குப்பம், ஆலம்பறைக் குப்பம் மற்றும் ஆற்காட்டுத்துறையில் 385 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்காக நிதியுதவி ஏற்பாடு

செய்யப்பட்டுள்ளது. ஆழ்கடலில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இஸ்ரோவின் உதவியுடன் செயற்கைக்கோள் அடிப்படையிலான தடையற்ற தகவல் தொடர்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. மீன்வளத் துறையின் கீழ், **112** காவல் பணியாளர்களைக் கொண்ட ‘கடல் அமலாக்கப் பிரிவு’ உருவாக்கப்பட்டுள்ளது.

**25)** தமிழ்நாடு ‘ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை’ திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வேலை தேடி இடம் பெயரும் ஏழைக் குடும்பங்கள் ரேஷன் பொருட்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இத்திட்டம் பெருமளவில் பயனளிக்கும். கோவிட் நிவாரண நடவடிக்கைக்காக கூடுதலாக **19.95** இலட்சம் மெட்ரிக் டன் விலையில்லா அரிசி, அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது. **2020** ஆம் ஆண்டு ஏப்ரல் முதல்

ஜூலை மாதம் வரை, மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் உரித்தான, பருப்பு, பாமாயில் மற்றும் சர்க்கரை ஆகியவை விலையில்லாமல் வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைகளுக்காக மாநில அரசு கூடுதல் மானியமாக 5,402 கோடி ரூபாய் செலவை ஏற்றுக்கொண்டது.

26) தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். 2019 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 81 திட்டங்கள் வணிக உற்பத்தியைத் தொடங்கி விட்டன. மேலும், 191 திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல்பாட்டில் உள்ளன. 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்குப் பின்னர், மேலும் 149 திட்டங்களில், 1,06,664 கோடி ரூபாய் மதிப்பில் முதலீட்டை ஈர்த்து, 2,42,705 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை தமிழக அரசு அளித்துள்ளது. கோவிட்–19 பெருந்தொற்றுக்

காலத்திலும், இத்தகைய பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்த்ததில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி ஈடுபாட்டையும், முனைப்பான முயற்சிகளையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். வளர்ந்துவரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக, மின்சார வாகனக் கொள்கை மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கையை அரசு அறிவித்துள்ளது. இவை இரண்டும் மேலும் முதலீடுகளை ஈர்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. தொழில் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் விதமாக, 'புதிய தொழில் கொள்கைக்கு' அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இக்கொள்கை விரைவில் வெளியிடப்படும்.

27) தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தொழில்முனைவோருக்கான நாற்றங்காலாக விளங்குவது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலைவாய்ப்பு அளிப்பவையாகவும் திகழ்கின்றன. தமிழ்நாட்டில், 2,73,241 கோடி ரூபாய் முதலீட்டுடன், 1.52 கோடி நபர்களுக்கு

வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய, **23.60** இலட்சம் பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்கள் உள்ளன. அனைத்துத் தரப்பினரிடமும் கலந்தாலோசித்து, 'புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் கொள்கை' இறுதி செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் வெளியிடப்பட உள்ளது. கோவிட்–**19** பெருந்தொற்று நோயிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீண்டு வருவதற்கு உதவும் விதமாக, பல்வேறு வகையான மானியங்களை, அரசு முன்கூட்டியே வழங்கியது. மேலும், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைத் திறம்பட ஒருங்கிணைத்து, இந்திய அரசின் 'அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்தின்' மூலம் தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயனடைவதை உறுதிசெய்துள்ளது. அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ், கடன்கள் பெறுவதை எளிதாக்குவதற்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும், சொத்து ஆவணங்களை அடமானம் செய்யும் (சமமான

அடமானங்கள்) பத்திரப் பதிவு மீதான முத்திரைத் தீர்வையை செலுத்துவதிலிருந்து அரசு, மார்ச் 31, 2021 வரை விலக்களித்துள்ளது. மேலும், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான பதிவுக் கட்டணத்தை 1 சதவீதத்திலிருந்து 0.1 சதவீதமாகக் குறைத்துள்ளது. நிறுவனக் கடன் பெறுவதை மேலும் எளிதாக்குவதற்காக, 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் அரசு திருத்தம் மேற்கொள்ளும். இதன்படி, குறிப்பிட்ட காலக் கடன்கள் மற்றும் நடைமுறை மூலதனக் கடன்களைப் பெறும் பொருட்டு, பத்திரம் பதிவு செய்ய, பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு கடன் பெறுபவர்களும் கடன் வழங்குபவர்களும் நேரில் செல்வதைத் தவிர்த்து, சொத்து ஆவணங்களை அடமானம் செய்து பத்திரங்களை இணையவழியில் பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்படும். இந்தக் கொரோனா கால நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு ஏதுவாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குமாறு வங்கியாளர்களை வலியுறுத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான வங்கியாளர்கள் சிறப்பு குழுக்

கூட்டத்தினை கூட்டினார். இந்நடவடிக்கைகளின் காரணமாக, இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட, அவசரகாலக் கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அதிக அளவில் பயனடைந்துள்ளது.

**28)** தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு சிறந்த நீண்டகாலக் கடன் வழங்கும் நிறுவனமாகத் திகழ்வதற்கும், அதன் செயல்பாடுகளை விரிவாக்குவதற்கும், இதுவரை நிறுவனக் கடன் பெறாத குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுகின்ற வகையில், தமிழ்நாடு அரசு, இக்கழகத்தில், **1,000** கோடி ரூபாயை மூன்று வருடங்களில் முதலீடு செய்யும்.

**29)** தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவை வழங்குவதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இதற்காக, **2020** ஆம் ஆண்டிற்கான டிஜிட்டல் இந்தியா விருதுகளில் 'டிஜிட்டல் ஆளுமையில் சிறந்த

மாநிலம்' என்ற பிரிவில் தங்க விருதினை இந்திய குடியரசுத் தலைவரிடமிருந்து, தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. பின்தள கணினிமயமாக்கல் முறையில், மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ள 'ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்புத் திட்டம்' உட்பட, பெரிய அளவிலான தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் மின்னாளுமை கட்டமைப்பிற்குள் முன்னணி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதை 'தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கொள்கை' நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கட்டமைப்பின் மூலம் பல்வேறு அரசு சேவைகள் தடையின்றியும் பாதுகாப்பாகவும் வழங்கப்படும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் முதலீடுகளுக்கு ஏற்றதொரு மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதே, 'தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறிமுறைசார்ந்த செயற்கை நுண்ணறிவுக் கொள்கையின்' குறிக்கோளாகும். அண்மையில்

வெளியிடப்பட்ட ‘இணையப் பாதுகாப்புக் கொள்கை’ மூலம், தரவுகளின் உயர்தரப் பாதுகாப்பையும் தனியுரிமையையும் உறுதி செய்வதில் அரசு உறுதிபூண்டுள்ளது. மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்கு வருவாய் கிராமங்களில் **2021** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **31** ஆம் தேதிக்குள்ளும், எஞ்சிய கிராமங்களில் **2021** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **30** ஆம் தேதிக்குள்ளும் ‘பாரத்நெட் திட்டம்’ செயல்படுத்தப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் அதிவேக மற்றும் அளவிடத்தக்க அலைவரிசையை வழங்குவதற்கு ஏதுவாக, தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு, தமிழ்நெட் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ஒளிபரப்பு உட்கட்டமைப்புடன் பாரத்நெட்டை இணைப்பதன் மூலம், ஒரு ஒருங்கிணைந்த மின்னணு சேவை விநியோக தளமான ‘ஒருங்கிணைந்த மின்னணு உட்கட்டமைப்பு’ ஏற்படுத்தப்படும்.

**30)** அனைத்து நுகர்வோருக்கும் தரமான, நம்பகத்தன்மை வாய்ந்த மின்சாரத்தை வழங்குவது

தமிழ்நாடு உட்கட்டமைப்பின் ஒரு அடிப்படைக் கூறாகும். தமிழ்நாடு ஒரு மின் மிகை மாநிலமாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில், **32,149** மெகாவாட் மொத்த மின் உற்பத்தித் திறனை அடைவதற்கு, **15,745** மெகாவாட் உற்பத்தி திறன் சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றில், **16,166** மெகாவாட் மின்சாரம், நீர் மின்சக்தி உட்பட, புதுப்பிக்கத்தக்க மின்சக்தி ஆற்றலாகும். நம்பகமான மின்சக்தி வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு, தொடரமைப்பு மற்றும் பகிர்மான வலையமைப்பின் கொள்திறனை மேம்படுத்துவதற்காக, பெருமளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

**31)** தமிழ்நாட்டின் உயர்தர சாலைக் கட்டமைப்பு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கின்றது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக, மேம்பாலப் பணிகளும், பல்வழிச் சாலை மேம்பாலப் பணிகளும்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிப்பாளையம் வரை 1,620 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைக்கப்பட உள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன் சென்னை எல்லை சுற்றுச் சாலை திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன், சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம் ஆகிய திட்டங்கள் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சாலைப் பாதுகாப்பிற்கு மாநில அரசு முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளிப்பதனால், மாநிலத்தில் விபத்துகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் 71,431 ஆக இருந்த மொத்த விபத்துகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 45,489 ஆகவும், 2016 ஆம் ஆண்டில் 17,218 ஆக இருந்த உயிரிழப்பிற்கு காரணமான

விபத்துகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 8,060 ஆகவும் குறைந்துள்ளன. உயிரிழப்பிற்கு காரணமான விபத்துகளைக் குறைப்பதில் சிறந்த மாநிலத்திற்கான விருதினை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு பெற்றுள்ளது.

32) குறைந்த விலை பேருந்துக் கட்டணத்துடன், பேருந்து சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோரின் பங்கினை மேலும் அதிகரிப்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. கோவிட்–19 பெருந்தொற்று நோயின் விளைவாக, பேருந்துப் போக்குவரத்தை இயக்குவதில் தீவிரக் கட்டுப்பாடுகள் இருந்தன. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன், பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடு இயல்பு நிலைக்கு மெல்லத் திரும்பி வருகின்றன.

**33)** சென்னை மெட்ரோ இரயில் திட்டம், கட்டம்–I இன் கீழ், வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரையிலான நீட்டிப்பு வழித்தடத்தில் பயணிகள் சேவை விரைவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இம்மாத இறுதியில் தொடங்கி வைக்கப்படும். மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால், **61,843** கோடி ரூபாய் மதிப்பீட்டில், **118.9** கி.மீ. நீளம் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதியை ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகியவை வழங்குகின்றன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு **50:50** பகிர்வு அடிப்படையில், மத்திய அரசு தங்களுடைய பங்கு மூலதனத்திற்கு ஒப்புதலை வழங்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

**34)** கோவிட்–19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில், தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் முன்னணி வகிக்கின்றன. மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் வெளிப்புற நிதியுதவி முகமைகள் மூலம் நிதியளிக்கப்பட்ட பல்வேறு நகர்ப்புற உட்கட்டமைப்புத் திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் நீர்நிலைகளை மீள்நிரப்புவதற்காக, கழிவுநீரை மறுசுழற்சி செய்து, மறுபயன்பாடு செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இயங்கி வரும் இரண்டு 45 எம்.எல்.டி. மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடு பரவல் சுத்திகரிப்பு நிலையங்களைத் தவிர, கூடுதலாக பெருங்குடி ஏரியையும் போரூர் ஏரியையும் மீள்நிரப்புவதற்காக, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கத்தில், 10 எம்.எல்.டி. திறனுடைய இரண்டு மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**35)** நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களுக்குத் தரமான வீட்டு வசதிகளை வழங்குவதற்கு இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. ஊரகப் பகுதியில் வீடற்ற ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் கான்கிரீட் கூரையுடன் கூடிய ஒரு வீடும், நகர்ப்பகுதியில் வசிக்கும் வீடற்ற ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கு அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு வீடும் கட்டித் தரப்படும். மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் கட்டி முடிக்கும் தறுவாயிலிருக்கும் **2,57,925** வீடுகளின் கட்டுமானப் பணிகளை விரைவாக முடிக்க உதவும் வகையில், பிரதம மந்திரியின் வீட்டுவசதித் (ஊரகம்) திட்டத்தின் கீழ், வீடு ஒன்றிற்கு சிறப்பு கூடுதல் ஒதுக்கீடாக **70,000** ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனுடன், பிரதம மந்திரியின் வீட்டு வசதித் (ஊரகம்) திட்டத்தின் கீழ், வீடு ஒன்றிற்கு, இந்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலை **1.20** இலட்சம் ரூபாய்க்குப் பதிலாக, தமிழ்நாட்டில் வீடு ஒன்றிற்கு மொத்தச் செலவு **2.40** இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், மாநில அரசின் பங்கு **1.68** இலட்சம் ரூபாய் ஆகும். நகர்ப்புறப் பகுதிகளில்

வீட்டுவசதிகளை மேம்படுத்துவதற்காக, ‘தமிழ்நாடு நகர்ப்புற திறனுக்கேற்ற வீட்டுவசதி மற்றும் உறைவிடக் கொள்கை’ வகுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுவசதிகளை ஏற்படுத்துவதற்காக, உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து, அரசு நிதியுதவியை திரட்டியுள்ளது. விதிகளை எளிமைப்படுத்தியதாலும், அதிகாரங்களைப் பகிர்ந்தளித்ததாலும், திட்ட வடிவமைப்பிற்கு அனுமதி வழங்கும் நடைமுறை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல் திட்டத்தின் மூலம், **39,939** மனைப்பிரிவுகள் மற்றும் **21,86,101** மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. பெருவாரியான மக்களின் கோரிக்கையின்படி, விடுபட்டுள்ள இனங்களுக்கு, **20.10.2016** அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் கால அளவு **28.02.2021** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**36)** காடுகளைப் பாதுகாப்பதற்கும், மரங்களின் பரப்பளவினை அதிகரிப்பதற்கும் இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. **2019** ஆம் ஆண்டின் இந்திய வன நிலை அறிக்கையின்படி, **2017** மற்றும் **2019** ஆம் ஆண்டுகளுக்கு இடையே, தமிழ்நாட்டில் **8,302** ஹெக்டேர் அளவில் வனங்களின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது மற்றும் **159** சதுர கி.மீ அளவில் மரங்களின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, காடுகள் மற்றும் மரங்களின் பல்லுயிர்த் தன்மையில் இரண்டாவது நிலையை நமது மாநிலம் அடைந்துள்ளது. வனவிலங்குகளின் வாழ்விடத்தைப் பாதுகாத்து வருவதன் விளைவாக, **2014** ஆம் ஆண்டில் **229** ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, **2018** ஆம் ஆண்டில் **264** ஆக உயர்ந்துள்ளது.

**37)** தமிழ்நாட்டின் மனித வளத்தை, மாநிலத்தின் வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, இளைஞர்களின் திறனை முழுமையாக மேம்படுத்த வேண்டும்.

எனவே, நம் மாநிலத்தில் முன்னுரிமை பெற்ற முதலீடாக கல்வி தொடர்ந்து விளங்கி வருகிறது. 2017–18 ஆம் ஆண்டிலிருந்து, 19 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 5 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 3 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் கூடுதலாகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் தரத்தை உயர்த்துவதற்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இணைய வழி வகுப்புகளில் மாணவர்கள் கலந்து கொள்வதற்கு ஏதுவாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்கள் என ஆக மொத்தம், 9.69 இலட்சம் மாணவர்களுக்கு, நான்கு மாதங்களுக்கு, நாளொன்றிற்கு 2 ஜி.பி. விலையில்லா தரவு சிம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

**38)** மாணவர்கள் தொடர்ந்து, இடைவிடாமல், கல்வி கற்பதை உறுதி செய்வதே, நடப்புக் கல்வியாண்டின் சவாலாகும். மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய சத்துணவு, பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட சலுகைகள் இப்பெருந்தொற்றுக் காலத்திலும் வழங்கப்பட்டு வருகிறது. கல்வி தொலைக்காட்சி மற்றும் 10 தனியார் தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு வாயிலாக, மாணவர்கள் பாடங்களை கற்கும் வண்ணம், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விலையில்லா மடிக்கணினிகள் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட மடிக்கணினியில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்ட பாடங்கள் வாயிலாகவும், பல்வேறு இணையதளங்கள் வாயிலாகவும், மின்னணு தொகுப்பில் பாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்விக்கான இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கையின் விளைவுகளை ஆய்வு செய்வதற்காக, தமிழ்நாடு அரசு இரண்டு குழுக்களை அமைத்துள்ளது.

இருமொழிக் கொள்கையை தொடர்ந்து பின்பற்றுவதில் தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

**39)** திறன் மேம்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவத்தை தொடர்ந்து அளித்து வருகிறது. வாகனம், வாகன உதிரி பாகங்கள், இயந்திரக் கருவிகள், மருத்துவமனை மற்றும் சுகாதார சேவைகள், போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் பரிமாற்றம் ஆகிய துறைகளைச் சார்ந்த உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் முழுமையாகச் செயல்பட்டு வருகின்றன. கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்புத் துறைகளில் உயர்திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவுவதற்கு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களுக்கு, **2013–14** ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்திற்காக தமிழ்நாடு அரசு, கூடுதலாக தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து, மொத்தமாக **682** கோடி ரூபாயை வழங்கியுள்ளது.

**40)** கோவிட்–19 பெருந்தொற்று தாக்கியபோது, புலம்பெயர் தொழிலாளர்களைக் கையாளுவதில் தமிழ்நாடு அரசு பரிவுடன் நடந்து கொண்டது. மாநிலம் முழுவதும் உள்ள இலட்சக்கணக்கான கட்டுமானம் மற்றும் ஏனைய தொழிலாளர்களுக்கு இலவச உணவு வழங்கப்பட்டது. **22,74,582** அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் மாநிலங்களுக்கு இடையேயான புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. சிறப்பு இரயில் சேவைகள் மூலம் **4,03,042** புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பிச் செல்வதற்கான செலவை இந்த அரசு ஏற்றுக்கொண்டது. மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர் தொழிலாளர்களுக்காக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை, தமிழ்நாட்டிலுள்ள **3,16,368** மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர் தொழிலாளர்கள் பற்றிய தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகித்து வரும் இப்புலம்பெயர் தொழிலாளர்களுக்கான நிவாரண

நடவடிக்கைகளை பரிவுடன் செயல்படுத்தியதனால், ஊரடங்கு கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர், ஏராளமான புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களுடைய பணிகளுக்காக தமிழ்நாட்டிற்கு மீண்டும் திரும்பியுள்ளனர்.

**41)** பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலை தொழிலாளர்கள் நலனை மேம்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு **30.12.2020** அன்று தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அமைத்தது.

**42)** பணிபுரியும் பெண்களின் நலனை மேம்படுத்த, இந்த அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது. முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை அமல்படுத்தியதன் மூலம், குழந்தை பாலின விகிதம் அதிகரித்து வருகிறது. சட்ட விதிகளை திறம்பட நடைமுறைப்படுத்தியதன் மூலம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைக் குறைக்க,

சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பணிபுரியும் பெண்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான உறைவிட வசதிகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் கீழ் மாநிலம் முழுவதும் பயனடைந்து வருகிறது. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதற்கான இலக்காக 14,000 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ், 2,53,457 பயனாளிகளுக்கு உதவும் விதமாக 300 கோடி ரூபாய் செலவில், 120 வட்டாரங்களில் சிறப்பு கோவிட் நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**43)** ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், திருமணமாகாத பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் ஆகியோரைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக

விளங்குகிறது. சமூகப் பாதுகாப்பு மற்றும் முதியோர் ஓய்வூதியத்தை 33,60,021 நபர்கள் பெற்று வருகின்றனர். பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007 திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் கீழ், பராமரிப்பு உதவித்தொகை கோரிய 3,966 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன. 5 உட்கூறுகள் அடங்கிய, மூத்த குடிமக்களுக்கான மாநிலச் செயல்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

44) அனைத்து சமூகப் பொருளாதார நடவடிக்கைகளிலும் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பை உறுதி செய்வதில் அரசு உறுதிபூண்டுள்ளது. ஊரடங்கு காலத்தில் மாற்றுத் திறனாளிகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. மேலும், பராமரிப்பு உதவித் தொகை இரண்டு மாதங்களுக்கு முன்பே வழங்கப்பட்டது. தேசிய அடையாள அட்டை பெற்ற அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் சிறப்பு ரொக்க உதவியாக 1,000 ரூபாய் வழங்கப்பட்டது. மேலும், 5.31 கோடி ரூபாய்

செலவில் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பெட்டகங்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன. அனைத்து பொது அலுவலகங்களிலும் தடையில்லா உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான தணிக்கைப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசு நிறுவனங்களில் வழங்கப்படும் 4 சதவீத சிறப்பு ஒதுக்கீட்டில் நிலுவையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக, ஒரு சிறப்பு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

**45)** ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கைகளை ஏற்று 60:40 பகிர்வு அடிப்படையில் ஆதி திராவிடர்களுக்கு உயர்கல்வி உதவித்தொகையை மறுசீரமைத்த மத்திய அரசுக்கு எனது நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். நடைமுறையிலுள்ள கல்வி உதவித்தொகை திட்டத்தின் மூலம், தற்போது பயன் பெறும் அனைத்து மாணவர்களும் புதிய திட்டத்திலும் தொடர்ந்து பயனடைவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

46) தைப்பூசம் என்பது தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் ஒரு முக்கியமான பண்டிகையாகும். மேலும், பல்வேறு பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று, தைப்பூசம் பண்டிகை தினத்தை பொது விடுமுறையாக இந்த அரசு அறிவித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை, 11,464 திருக்கோயில்களில் 551 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த கனமழையால் சேதமடைந்த சிதம்பரம் அருள்மிகு இளமையாக்கினார் திருக்கோயிலின் திருக்குளச் சுற்றுச் சுவர் 2.61 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது. நிவர் மற்றும் புரெவி புயல்களின் காரணமாக

சேதமடைந்த நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள நாகூர் தர்கா குளத்தின் சுற்றுச்சுவர்கள் 4.34 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது. ஹஜ் மற்றும் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கான நிதியுதவியை அரசு உயர்த்தியுள்ளது. மொழிவாரி சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், உரிய சட்டத்தின் மூலம் மாநில சிறுபான்மையினர் ஆணையம் விரிவுபடுத்தப்படும்.

47) கடந்த 2020 ஆம் ஆண்டு மனிதகுல வரலாற்றில் மறக்க முடியாத ஆண்டாக இருந்தது. கோவிட்–19 பெருந்தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து, உறுதியுடனும், மனதைரியத்துடனும், நாம் மீண்டு வருவோம். வரும் ஆண்டுகளில் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் புத்துயிர் காணுவோம் என்ற நம்பிக்கையில், நம் தேசத்தின் மக்கள் அனைவரும், குறிப்பாக தமிழக மக்கள், இந்த முன்நிகழ்வில்லாத நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

கோவிட் பெருந்தொற்று மீட்புப் பணிகளில் அயராது உழைத்த சுகாதாரத்துறை, வருவாய்த்துறை, காவல்துறை, உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து அரசுத் துறைகளின் முன்களப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள், இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து குடிமக்களுக்கும் இத்தருணத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் பங்களிப்பிற்காக, உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**48)** அனைத்து துறைகளிலும் முன்னிலை வகித்து வருவதால், நாட்டிலேயே சிறந்த நிருவாகத்திறன் மிக்க மாநிலம் என்ற பாராட்டினை தமிழ்நாடு பெற்றுள்ளது. பல்வேறு துறைகளின் சிறப்பான செயல்பாடுகளினால், தேசிய அளவில் ஏராளமான விருதுகளைப் பெற்று, வெற்றிநடை போடுகிறது தமிழகம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தன்னிகரற்ற தலைமையின் கீழ், சிறப்பாகச் செயல்படும் அனைத்து

அரசுத் துறைகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**49)** நாம் தமிழ்நாட்டின் **15**வது சட்டமன்றத்தின் நிறைவு கூட்டத் தொடரில் கூடியுள்ளோம். அரசின் சார்பாக, பல்வேறு கொள்கைகளையும், திட்டங்களையும் நான் எடுத்துரைத்துள்ளேன். இந்த அரசு, பெருமைப்படும் விதமாக பல சாதனைகளைப் புரிந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், ஜனநாயக முறையில் விவாதங்களிலும், கலந்துரையாடல்களிலும் இந்த மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்களித்ததன் மூலம், இந்த அரசின் கொள்கைகள் மேம்படுத்தப்பட்டு, அவை திறம்பட செயல்படுத்தப்பட்டன. உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**